<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி.எஸ்.சுகன்யாஸ்ரீ,B.A.B.L (Hons), M.L., PGDAML
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ.)
சிதம்பரம்.

2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 07-ம் நாள் வெள்ளிக்கிழமை

*<u>நிறைவேற்று மனு எண். 109/2022 in</u>*
*<u>அசல் வழக்கு எண்: 20/2021</u>*

ராமலிங்கம் ....மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர்

/எதிர்/

முருகன் ..... எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு கடந்த 21.3.2024-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.விஜயலட்சுமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கை நடத்தாததால் தோன்றாதரப்பனிராக்கப்பட்டு மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் உத்தரவு.

<u>உத்தரவு</u>

1.இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 21 விதி 37, 38ன்படி எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பி மனுதாரருக்கு சேரவேண்டிய தொகை ரூ.72,230-ஐ செலுத்த உத்தரவிட்டு தவறும்பட்சத்தில் சிவில் அரெஸ்ட் செய்து தொகை வசூல் செய்து தர உத்தரவாகும் பொருட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>

2. இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் இந்த எதிர்மனுதாரர்கள் பேரில் டிகிரி பெற்று நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி டிகிரி கடனை கொடுத்து பைசல் செய்யுமாறு பலதடவை எதிர்மனுதாரரை கேட்டபோதும் தொகையினை கொடுத்து பைசல் செய்வதாக மட்டும் சொல்லி கொடுக்காமல் எதிர்மனுதாரர் வீண் காலதாமதம் செய்துவருவதாகவும் இவர்களுக்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளதாகவும் மேலும் கையில் ரொக்கமும் வைத்துள்ளதாகவும் எனவே இவர்களுக்கு Arrest Warrant போனால் ஒரே சமயத்தில் தொகையினை கொடுத்து பைசல் செய்ய கூடிய போதிய வசதிகள் இருந்தும் வேண்டுமென்றே டிகிரி

கடனை கொடுத்து பைசல் செய்யாமல் காலம் கடத்திவருவதால் எதிர்மனுதாரர்களுக்கு Arrest Warrant பிறப்பித்து தொகையினை வசூலித்து தர வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

3. மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய அருகமானது என்றும் இந்த மனுதாரர் எதிர்மனுதாரரை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலுக்கு அனுப்பி டிக்கிரி தொகையை வசூல் செய்ய நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் எதிர்மனுதாரருக்கு டிக்கிரி தொகையை செலுத்தும் அளவிற்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்றும் மேற்படி எதிர்மனுதாரர் ஓர் இந்திய மூத்த குடிமகன் என்றும் கைது செய்து சிவில் சிறைச்சாலையில் வைக்க முடியாது என்றும் எதிர்மனுதாரருக்கு டிக்கிரி தொகையை செலுத்துவதற்கு போதுமான சொத்துக்கள் உள்ளதா என்பதை மனதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் என்றும் நிறைவேற்றுமனுவின் 7வது காலத்தில் கணக்கிடப்பட்டுள்ள வட்டி விகிதங்கள் தவறானவை என்றும் இந்த அசல் வழக்கில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மீது இந்த எதிர்மனுதாரர் மேல் முறையீடு தாக்கல் செய்ய CA.1539/2023 என்ற எண்ணில் நகல்மனு தாக்கல் செய்துள்ளார் அதனால் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீட்டின் தீர்ப்புரை பகரப்படும் வரையில் இந்த நிறைவேற்று மனு செல்லாது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆகவும், அருள் என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். முனதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், கோப்புகளை பரிசீலனை செய்ததிலும் இந்த மனுவானது கட்டளை 21 விதி 37, 38ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அசல் வழக்கின் டிகிரி தொகை மனுதாரருக்கு சேரவேண்டி உள்ளது என்றும், டிகிரி கடனை கொடுத்து பைசல் செய்யுமாறு பலதடவை எதிர்மனுதாரர்களை கேட்டபோதும் தொகையினை கொடுத்து பைசல் செய்வதாக மட்டும் சொல்லி பைசல் செய்யாமல் வீண் காலதாமதம் செய்து வருகி-

றார்கள் என்றும் எனவே எதிர்மனுதாரர்களுக்கு Arrest Warrant பிறப்பித்து தொகையினை வசூலித்து தர வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. அசல் மனுவானது மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து கடனை வசூல் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 26.9.2022-ல் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

8. நிறைவேற்று மனு என்பது தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு தாக்கல் படுவதாகும். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி, எதிருரை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், *"எதிர்மனுதாரருக்கு டிக்கிரி தொகையை செலுத்தும் அளவிற்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்றும் மேற்படி எதிர்மனுதாரர் ஓர் இந்திய மூத்த குடிமகன் என்பதால் கைது செய்து சிவில் சிறைச்சாலையில் வைக்க முடியாது என்றும் எதிர்மனுதாரருக்கு டிக்கிரி தொகையை செலுத்துவதற்கு போதுமான சொத்துக்கள் உள்ளதா என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் நிறைவேற்றுமனுவின் 7வது காலத்தில் கணக்கிடப்பட்டுள்ள வட்டி விகிதங்கள் தவறானவை என்றும் இந்த அசல் வழக்கில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மீது இந்த எதிர்மனுதாரர் மேல் முறையீடு தாக்கல் செய்ய CA.1539/2023 என்ற எண்ணில் நகல்மனு தாக்கல் செய்துள்ளார் அதனால் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீட்டின் தீர்ப்புரை பகரப்படும் வரையில் இந்த நிறைவேற்று மனு செல்லாது"* என குறிப்பிட்டுள்ளார்.

9. எதிர்மனுதாரர் பெற்ற கடனை திருப்பி தராமல் இருப்பதை "எதிர்மனுதாரர் ஓர் மூத்த குடிமகன்" என்பதால் மட்டுமே எதிர்மனுதாரருக்கு சலுகை செய்ய இயலாது. மூத்த குடிமகனாக இருந்தாலும் பெற்ற கடனை திருப்பி செலுத்திதான் ஆக வேண்டும். எதிர்மனுதாரர் பெற்ற தொகையை திருப்பி செலுத்த வேண்டுமே தவிர பணத்தை செலுத்த தன்னிடம் போதுமான வசதி உள்ளதா என்பதையும் மனுதாரர் நிருபணம் செய்ய வேண்டும் என குறிப்பிடும் எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. நிறைவேற்று மனுவின் 7வது காலத்தில் கணக்கிடப்பட்டுள்ள வட்டி விகிதம் தவறானவை என குறிப்பிடும் எதிர்மனுதாரர் அவை எவ்விதத்தில் தவறானவை என்பதற்கான விளக்கத்தினை தெரிவிக்கவில்லை. அசல் வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை பெற நகல் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனை பெற்று மேல்முறையீடு தாக்கல் செய்து அதில் தீர்ப்புரை பெறும்வரையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என குறிப்பிடும் எதிர்மனுதாரர், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டது ஒருதலைபட்ச தீர்ப்பு என்றும் அந்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய இந்நீதிமன்றத்தில்தான் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொள்ளவில்லை. அதை விடுத்து அசல் வழக்கு

தீர்ப்புரை மீது மேல்முறையீடு தாக்கல் செய்யப்போவதாக குறிப்பிட்டுள்ளது ஏற்கும்படியாக இல்லை. மேலும் அவர் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகல் பெற்ற பின்னரும் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது குறித்த தெளிவான விளக்கம் எதிர்மனுதாரர் தரப்பில் இல்லை.

10. மேலும் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்த Means Affidavitல் *"இவர்களுக்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன என்றும், மேலும் கையில் ரொக்கமும் வைத்துள்ளனர் என்றும், எனவே இவர்களுக்கு Arresst Warrant போனால் ஒரே சமயத்தில் தொகையினை கொடுத்து பைசல் செய்ய கூடிய போதிய வசதிகள் இருந்தும் வேண்டுமென்றே டிகிரி கடனை கொடுத்து பைசல் செய்யாமல் காலம் கடத்தி வருகிறார்கள்"* என குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் எதிர்மனுதாரர்களுக்கு கடனை பைசல் செய்யக்கூடிய வசதி உள்ளது என்பது தெரிய வருகிறது. அதனை ஆட்சேபிக்கும் பொருட்டு ம.சா.1 சாட்சியத்தை எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையும் செய்யவில்லை. மேலும், மூன்றாம் நபரான ம.சா.2 சாட்சியமும் ம.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.2 மூலம் ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. முருகன் பெயரில் உள்ள பட்டா தான் ம.சா.ஆ.1 ஆகும். எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் செய்யாத காரணத்தினால் எதிரிடை அனுமானம் எடுகக்ப்பட்டு, மனுதாரர் கூறுவது போல் எதிர்மனுதாரருக்கு போதிய வசதி இருந்தும் தீர்ப்புரை நிறைவேற்ற முன் வரவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நாள் வரை தீர்ப்புரைக்கு இரத்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தீர்ப்புரையின் முழு விவரம் தெரிந்தும் எதிர்மனுதாரர் அமைதி காத்து வருகிறார். இந்த நிறைவேற்று மனு தீர்ப்பாணையின் அடிப்படையிலேயே வட்டி விதம் கணக்கிடப்பட்டிருப்பதாலும் நிறைவேற்று நீதிமன்றம் தீர்ப்பாணைக்குள் எதிராக செயல்பட முடியாது என்பதாலும், தீர்ப்பின் பலனை தீர்ப்பாணை பெற்றவர் அடையும் பொருட்டு, இம்மனுவை கீழ்கண்டவாறு அனுமதிப்பதே சரியான தீர்வாகும் என இந்நீதிமன்றம் முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, தீர்ப்பாணை தொகையை இதுவரை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்பதால், எதிர்மனுதாரரை ஏன் கைது செய்து உா-மையியல் சிறையில் (Civil Prison)ல் அடைக்கக்கூடாது என "காரணம் கேட்கும் குறிப்பாணை" (Show cause notice) எதிர்மனுதாரர்களுக்கு அனுப்ப உத்தரவிடப்படுக-றது. படி செலுத்த 3 நாட்கள். அழைக்க 10.7.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு,

அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 7.6.2024ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.S.Suganiya Sri)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(மு.கூ.பொ.)

**மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சி:**

ம.சா.1- ராமலிங்கம் (மனுதாரர்)
ம.சா.2- அருள்

**மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணம்:**

ம.சா.ஆ.1- 16.2.2024 பட்டா எண். 53- பதிவிறக்க நகல்

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

(Sd/-.S.Suganiya Sri)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(மு.கூ.பொ.)